கால்நடை பராமரிப்பு, பால் வளம்
மற்றும் மீன்வளத் துறை

# பால் வளம்

கொள்கை விளக்கக் குறிப்பு
**2017–2018**

மானியக் கோரிக்கை எண்.8

**கே.டி. ராஜேந்திரபாலாஜி**
பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 2–3 |
| 2 | பால்வளத் துறை | 3–11 |
| 3 | பால் உற்பத்தியாளர்கூட்டுறவுகளின் மூன்றடுக்கு முறை | 12–14 |
| 4 | தொடக்க பால் கூட்டுறவு இணையம் | 14–16 |
| 5 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் | 16–27 |
| 6 | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் | 27–48 |
| 7 | திட்டங்கள் | 49–58 |
| 8 | பெரும் திட்டங்கள் | 59–64 |
| 9 | பால் உற்பத்தியாளர்களுக்கான சிறப்பு சேவைகள் | 65–69 |
| 10 | பணியாளர் நலன் | 69–71 |
| 11 | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை | 71–77 |
| 12 | முடிவுரை | 78–79 |

## பால்வளத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2017–2018

*வேளாண்மைப்பிரிவின் ஓர் அங்கமாகவும், கிராமப்புற பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் ஒரு கருவியாகவும், பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பினை அளிக்கும் தொழிலாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற கால்நடை வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கோடு, கால்நடை பராமரிப்புத் துறைக்கும், பால்வளத் துறைக்கும் . . . . . முன் எப்போதும் இல்லாத அளவுக்கு எனது அரசால் முக்கியத்துவம் தரப்பட்டு, பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.*

**டாக்டர்.ஜெ.ஜெயலலிதா**
**–மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்**
**(23.09.2015 அன்று ஆற்றிய உரை)**

**முன்னுரை**

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் 1904 ஆம் ஆண்டு துவங்கியது. குஜராத் மாநிலத்தில் உள்ள **ஆனந்த்** என்ற இடத்தில் 1946ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஆனந்த் பால் ஒன்றியம் (அமுல்), வெற்றிகரமான பால் கூட்டுறவு நிறுவனங்களில் உன்னதமான முன் உதாரணமாகும்.

தீவிர பால் பெருக்குத் திட்டம், தேசிய பால் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் 1970 ஆம் ஆண்டில் தேசிய பால் வள வாரியத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

நாடு முழுவதும் கூட்டுறவு இயக்கம் பரவிக்கொண்டிருந்த நிலையில் இந்தியாவில் **"வெண்மைப்புரட்சி"** துவங்கியது. இந்தியா, உலகில் அதிக அளவு பால் உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. மொத்த உற்பத்தியால் அல்லாமல் பெரும்பான்மையோரின் உற்பத்தியால் இச் சாதனை எய்தப்பட்டது.

கடந்த 2015–16ஆம் ஆண்டில் இந்தியா 155.491 மில்லியன் டன் (4144 இலட்சம் லிட்டர் நாளொன்றுக்கு) பாலை உற்பத்தி செய்துள்ளது. இது உலக பால் உற்பத்தியில் 18.5 சதவீதமாகும். தமிழகம் நாளொன்றுக்கு 193 இலட்சம்

லிட்டர் பால் உற்பத்தியுடன் நாட்டின் அதிக பால் உற்பத்தி செய்யும் முதல் 10 மாநிலங்களில் இடம் பெற்றுள்ளதோடு, நாளொன்றுக்கு 28.50 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து இந்திய கூட்டுறவு அமைப்புகளில் நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

**"இரண்டாம் வெண்மைப்"** புரட்சியின் பலனை அடையும் வகையில் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான பால் கொள்முதல் விலை, சங்கம், மாவட்ட ஒன்றியம் மற்றும் மாநில இணைய அளவில் பால் பண்ணை உட்கட்டமைப்புக்காக அதிக அளவில் முதலீடு போன்ற பல்வேறு நடவடிக்கைகளை தமிழகத்தில் ஆவின் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் தமிழக அரசு வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு விலையில்லா கறவை மாடுகளை வழங்கியுள்ளது.

## 2. பால்வளத்துறை

### 2.1. பால்வளத்துறையின் குறிக்கோள்கள்

1) தனியார் வியாபாரிகளின் சுரண்டல்களிலிருந்து பால் உற்பத்தியாளர்களை பாதுகாக்க ஏதுவாக தொலைதூர

கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல்

2) பாலின் தரத்தின் அடிப்படையில், பால் உற்பத்தியாளர்களுக்கு நிலையான மற்றும் நியாயமான விலை கிடைக்கச் செய்தல்

3) அமைப்புசாரா பால் உற்பத்தித் தொழிலை, ஒருங்கிணைந்த அமைப்புசார் தொழிலாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

4) கறவை மாடுகளுக்குத் தேவையான கலப்புத் தீவனம் மற்றும் பசுந்தீவனம் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்வதோடு தேவையான கால்நடை இடுபொருட்கள் மற்றும் கால்நடைகளின் நலன் சார்ந்த சேவைகளை அளித்தல்

5) நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்

6) மகளிர் நலன் மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

## 2.2. குறிக்கோள்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

பால்வளத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்றிட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. பால் கூட்டுறவு அமைப்பில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல், கால் நடைகளுக்கு காப்பீடு வசதி, பசுந்தீவன வளர்ப்புக்கு விதை மற்றும் விதை கரணை போன்ற இடு பொருட்கள் வழங்குதல்

2. பால் தரப்பரிசோதனை மற்றும் தேவையான விரிவாக்கக் கல்வி வழங்குவதன் மூலம் கிராம அளவில் தூய பால் உற்பத்தித் திட்டத்தை பலப்படுத்துதல்

3. மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

4. பால் கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்படும் பால்பண்ணைகளின் கையாளும் திறனை உயர்த்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

5. புதிய பாலகங்கள், பால் விற்பனை மையங்கள், புதிய பால் வழித்தடங்கள், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களை துவக்குதல் மற்றும் பால் அட்டை விற்பனையை உயர்த்துதல்.

## 2.3. துறையின் நிர்வாக அமைப்பு

தமிழகத்தில் 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பால்வளத்துறை, பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார். இவர் மாநிலத்தின் மூன்றடுக்கு பால் கூட்டுறவுகளுக்கும் செயல் பதிவாளராக, 1983ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் கீழான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

1983ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் கீழான சட்டப்பூர்வ

நடவடிக்கைகளை செயல்படுத்த மற்றும் நிர்வாகப் பணிகளை மாவட்ட அளவில் மேற்கொள்ள, அதிகார பகிர்வு பெற்ற 29 துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்துறையின் கீழ் களப் பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பணி நிலைகளில் மொத்தம் 805 பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

## 2.4. பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்

1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகளில் தெரிவித்துள்ளபடி தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் எந்தவொரு உறுப்பினரும், தேர்தலுக்கு முந்தைய கூட்டுறவு ஆண்டுத் துவக்கம் முதல், தேர்தல் நாளுக்கு 30 நாட்களுக்கு முன்பு வரையுள்ள காலத்தில் 300 லிட்டர் பால் அல்லது 120 நாட்கள் சங்கத்திற்கு பால் ஊற்றியிருந்தால் மட்டுமே உறுப்பினர் தேர்தலில் நிற்பதற்கும், வாக்களிப்பதற்கும் தகுதியுடையவராகிறார். இறுதியாக 1996–97ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டது.

எனினும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு இல்லாத நிலையில் 2001 முதல் பால் கூட்டுறவுகளின் மேலாண்மை, 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 2007ஆம் ஆண்டில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. எனினும் சில காரணங்களுக்காக தேர்தல் நடைமுறைகள் நிறுத்தப்பட்டு, பால் கூட்டுறவுகளின் மேலாண்மை மீண்டும் தனி அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் மாநில அரசு புதிய மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையம் ஒன்றை அமைத்து பால்வளத்துறை ஆணையர் மாநில தேர்தல் அலுவலராகவும், துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) மாவட்ட தேர்தல் அலுவலர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். அதன்படி 3 அடுக்கில் உள்ள அனைத்து வகை பால் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள், தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் 09.05.2013 அன்றும், மாவட்ட ஒன்றியங்களில் 11.06.2013 அன்றும் மற்றும் மாநில இணையத்தில் 17.07.2013 அன்றும் பொறுப்பேற்றுள்ளன. புதிதாக பதிவு செய்யப்படும்

சங்கங்களை பொறுத்தவரை சங்கங்களின் மேலாண்மை, இடைக்கால நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு 6 மாத காலத்திற்குள் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

தமிழகம் முழுவதிலுமான பால் கூட்டுறவுகளின் நிர்வாகத்தில் மகளிர் தீவிரமாக ஈடுபடுவதிலிருந்து ஜனநாயகத்துவம் முக்கியப்படுத்துவது தெளிவாக காணமுடிகிறது.

## 2.5. தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்

சுகாதாரமான மற்றும் தரமான பால் மற்றும் பால் பொருட்களை பால் நுகர்வோருக்கு நியாயமான விலையில் குறித்த நேரத்தில் முறையாக சென்றடைவதை உறுதி செய்வதற்காக பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை இணையம் / மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து பால் பாக்கெட்டுகள் மற்றும் பால் பொருட்களை பெற்று பால் நுகர்வோருக்கு வழங்குகின்றன.

மாநிலம் முழுவதும் 62 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

சென்னை மாநகரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மட்டும் **49** பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், நாளொன்றுக்கு சுமார் **3.40** இலட்சம் லிட்டர் பாலை விற்பனை செய்கின்றன.

## 2.6. வரவு செலவு கணக்கு 2017–2018

**2017–18** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கில் ரூ.**118.63** கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதில் ரூ.**53.63** கோடி உத்தேசிக்கப் பட்ட வருவாய் செலவினமாகும். ரூ.**65.00** கோடி மூலதன செலவினமாகும்.

**அட்டவணை – 1 : நிதி ஒதுக்கீடு 2011–2012ஆம் ஆண்டு முதல் 2017–2018 வரை (இணைப்பு–1)**

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2011–2012 | 65.72 |
| 2012–2013 | 51.25 |
| 2013–2014 | 35.97 |
| 2014–2015 | 81.91 |
| 2015–2016 | 98.18 |
| 2016–2017 | 101.21 |
| 2017–2018 | 118.63 |

## 2.7. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்


பால் மற்றும் பால் பொருட்களை தர பரிசோதனை செய்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு சென்னை மாதவரத்தில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் கட்டுப்பாட்டில் ஒரு தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. 2011ஆம் ஆண்டு வரை பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992ன் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கூட்டுறவு மற்றும் தனியார் பால் பண்ணைகளிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு இந்த ஆய்வகத்தில் பரிசோதிக்கப்பட்டன. 05.08.2011 முதல் உணவு பாதுகாப்புச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு, தனியார் பால் பண்ணை மாதிரிகள் பரிசோதனை செய்யும் அதிகாரம் இத்துறையிடம் இருந்து எடுக்கப்பட்டது. எனவே, கூட்டுறவு பால் மாதிரிகள் மட்டுமே தரம் உறுதி செய்வதற்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பு

| | | |
|---|---|---|
| அடுக்கு–1 கிராம அளவில் | – | ஒரு கிராமத்தில் உள்ள 25 பால் உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை தொடங்கலாம். 3 அடுக்கு அமைப்பில் அடிப்படை நிலையில் அமையும் இச்சங்கங்கள், பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து தாங்கள் உறுப்பினர்களாக உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன. |
| அடுக்கு–2 மாவட்ட அளவில் | – | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், மாவட்ட அளவிலான மத்திய கூட்டுறவு சங்கங்களாகும். இதில் ஒன்றியத்தின் விவகார எல்லையில் உள்ள அனைத்து கிராம அளவிலான தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினராக உள்ளன. ஒன்றியம் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து உபரி பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, உள்ளூர் பால் நுகர்வோருக்கு விற்பனை செய்வதுடன், அதிகப்படியான பாலை சென்னை |

மாநகர பால்பண்ணைகள் / சமச்சீர் பால் பண்ணைகளுக்கும் விற்பனைக்காகவும், உபபொருட்கள் மற்றும் பால்பவுடராக உருமாற்றம் செய்யவும் அனுப்புகிறது.

அடுக்கு–3 மாநில அளவில் – தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மாநில அளவில் செயல்படும் தலைமைச் சங்கமாகச் செயல்படும் அனைத்து மாவட்ட ஒன்றியங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை மாநகரத்தில் நேரடியாக பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தயாரிக்கப்படும் பால் மற்றும் பால் பொருட்களை “ஆவின்” என்ற வணிக பெயரில் சந்தையை ஏற்படுத்தி தருகிறது.




**4. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள்**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை உருவாக்க, அச்சங்க விவகார எல்லையில் வசிக்கும் குறைந்த பட்சம் 25 நபர்கள் தேவை.

கிராம அளவில் 1,793 மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளிட்ட 12,139 தொடக்க பால்

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இத் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அதன் உறுப்பினர்களிடமிருந்து நாளொன்றுக்கு 35 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்கு நாளொன்றுக்கு 4.5 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்தது போக மீதமுள்ள பாலை மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலின் தரத்திற்கேற்ப பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகும் பால் கொள்முதல் விலையினை தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வழங்குகின்றன. 01.11.2014 முதல் பசும் பால் மற்றும் எருமைப்பாலுக்கு முறையே லிட்டர் ஒன்றிற்கு ரூ.28/– மற்றும் ரூ.35/– கொள்முதல் விலையாக வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் இலாபம் ஈட்டுகிற போதெல்லாம் தங்களது இலாபத்தை தங்களது பால் உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்கின்றன.

தற்போதுள்ள 2,492 செயலற்ற சங்கங்களுக்கான காரணங்களை ஆராய்ந்து படிப்படியாக அச்சங்கங்களை மறுமலர்ச்சி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவ சேவைகளை மேலும் வலுப்படுத்தும் வண்ணம், கால்நடை மருத்துவர்கள் மற்றும் பயிற்சி பெற்ற கிராம பணியாளர்கள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு அவர்கள் வீட்டு வாசலிலேயே செயற்கை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆண்டிற்கு ஒரு கன்றினை பெறும் வகையில் உரிய காலத்தில் செயற்கை கருவூட்டல் செய்வது அவசியமாகும். எனவே பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி 2016–2017 ஆம் ஆண்டில் மொத்தம் 20.45 இலட்சம் செயற்கை கருவூட்டல்கள் செய்யப்பட்டன.

மேலும், கால்நடை பராமரிப்பு துறையின் ஒத்துழைப்போடு கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள 17 இலட்சம் கறவை மாடுகளுக்கு ஆண்டிற்கு இருமுறை (மார்ச் மற்றும் செப்டம்பர்) கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

## 5. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்:

தமிழகத்தில் அனைத்து வருவாய் மாவட்டங்களையும் உள்ளடக்கி 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்

ஒன்றியங்கள் இயங்கி வருகின்றன. இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிர்வாகம், தலைவர் தலைமையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. பொது மேலாளர் இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிர்வாக அமைப்பின் தலைவர் ஆவார். மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை தொகுப்பு பின்வருமாறு.

**அட்டவணை–2: <u>மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை திறன்</u>**

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொது மேலாளர் | 17 |
| 2 | துணைப் பொது மேலாளர் | 23 |
| 3 | உதவிப் பொது மேலாளர் | 83 |
| 4 | மேலாளர் | 363 |
| 5 | துணை மேலாளர் | 329 |
| 6 | விரிவாக்க அலுவலர் | 302 |
| 7 | அலுவலகப் பணியாளர்கள் | 498 |
| 8 | ஓட்டுநர்கள் | 255 |
| 9 | தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் | 2,349 |
| | **மொத்தம்** | **4,219** |

இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து, அதனை பால் சேகரிப்பு வழித்தட வாகனங்கள் மூலம் அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பு மையம் / குளிரூட்டும் நிலையம் / பால் பண்ணைக்கு பதப்படுத்தும் பணிக்காக அனுப்பி வைக்கின்றன. மேலும், துணைப்பதிவாளர்களுக்கு (பால்வளம்) கிராம அளவில் சங்கங்கள் அமைப்பதற்கு மாவட்ட ஒன்றியங்கள் உதவி செய்கின்றன.

மாவட்ட ஒன்றியங்கள், உள்ளூர் பால் தேவையை பூர்த்தி செய்தது போக, எஞ்சிய பாலை, பதப்படுத்தி சென்னையில் விற்பனை செய்வதற்காக இணையத்தின் மாநகர பால் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. மேலும் உள்ள உபரி பால், வெண்ணெய் மற்றும் பால்பவுடர் தயாரிக்க ஏதுவாக மதுரை, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலையில் உள்ள சமன்படுத்தும் பால்பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த 2016–17ஆம் ஆண்டில், இந்த சமன்படுத்தும் பால் பண்ணைகள், உபரி பாலிலிருந்து 10,517 மெட்ரிக் டன்

வெண்ணெய் மற்றும் **17,427** மெட்ரிக் டன் பால்பவுடர் உற்பத்தி செய்துள்ளன. **2017–2018**ஆம் ஆண்டில் பால்பவுடராக மாற்றப்படுவது குறைக்கப்பட்டு பாலாக விற்பனை செய்யப்பட உள்ளது.

## 5.1. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் கொள்முதல்

கடந்த **2015–16** ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு **28.97** இலட்சம் லிட்டராக இருந்த சராசரி பால் கொள்முதல் **2016–2017**ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு **28.50** இலட்சம் லிட்டராக உள்ளது. **03.08.2016** அன்று முன் எப்போதும் இல்லாத சாதனை அளவாக, **31.77** இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் பால் கொள்முதல் செய்த விவரம் பின்வருமாறு:

**அட்டவணை – 3: <u>மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் கொள்முதல்</u>**

| வ. எண். | ஆண்டு | நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் (இலட்சம் லிட்டரில்) |
|---|---|---|
| 1 | 2010–2011 | 20.67 |
| 2 | 2011–2012 | 21.40 |
| 3 | 2012–2013 | 24.36 |
| 4 | 2013–2014 | 23.22 |
| 5 | 2014–2015 | 23.68 |
| 6 | 2015–2016 | 28.97 |
| 7 | 2016–2017 | 28.50* |

*வறட்சியின் காரணமாக பால் கொள்முதல் சற்று குறைந்துள்ளது.

2017–18ம் ஆண்டில் அதிகப்படியான பாலை கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அட்டவணை – 4: மாவட்ட ஒன்றியம் வாரியாக பால் கொள்முதல் (நாளொன்றுக்கு சராசரி லிட்டர்) (இணைப்பு–2)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 56,000 | 75,391 | 81,598 | 1,03,083 | 1,26,688 | 97,812 |
| 2 | விழுப்புரம் | 1,52,000 | 1,79,514 | 1,72,545 | 1,70,793 | 1,96,861 | 2,09,878 |
| 3 | வேலூர் | 2,52,000 | 2,97,743 | 2,81,123 | 2,84,965 | 3,06,169 | 3,05,089 |
| 4 | தர்மபுரி | 1,09,000 | 1,45,698 | 1,28,230 | 1,21,778 | 1,73,079 | 1,78,698 |
| 5 | சேலம் | 4,24,000 | 4,67,218 | 4,49,553 | 4,56,480 | 5,11,652 | 4,97,708 |
| 6 | ஈரோடு | 2,31,000 | 2,49,478 | 2,34,053 | 2,32,371 | 3,07,112 | 2,99,428 |
| 7 | கோயம்புத்தூர் | 2,30,000 | 2,38,545 | 2,33,918 | 2,18,175 | 2,81,468 | 2,62,369 |
| 8 | நீலகிரி | 17,000 | 17,617 | 15,722 | 15,045 | 15,828 | 14,223 |
| 9 | மதுரை | 1,68,000 | 1,93,177 | 1,76,140 | 1,93,988 | 2,68,765 | 2,59,329 |
| 10 | திண்டுக்கல் | 40,000 | 46,052 | 41,011 | 46,091 | 63,651 | 63,575 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 2,94,000 | 3,14,746 | 3,04,085 | 3,12,077 | 3,94,829 | 4,11,508 |
| 12 | தஞ்சாவூர் | 42,000 | 54,165 | 51,170 | 50,352 | 53,769 | 52,466 |
| 13 | புதுக்கோட்டை | 14,000 | 18,177 | 15,112 | 29,473 | 42,718 | 42,810 |
| 14 | சிவகங்கை | 33,000 | 43,923 | 47,313 | 49,040 | 56,645 | 61,435 |
| 15 | விருதுநகர் | 12,000 | 16,414 | 15,443 | 16,552 | 15,964 | 16,663 |
| 16 | திருநெல்வேலி | 58,000 | 68,935 | 66,954 | 58,798 | 73,167 | 69,193 |
| 17 | கன்னியாகுமரி | 9,000 | 9,561 | 7,890 | 9,250 | 9,097 | 7,570 |
|  | **மொத்தம்** | **21,40,000** | **24,36,353** | **23,21,860** | **23,68,311** | **28,97,463** | **28,49,755** |

## 5.2. <u>மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் விற்பனை</u>

2015–2016 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9.29 இலட்சம் லிட்டராக இருந்த சராசரி பால் விற்பனை, 2016–2017ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9.52 இலட்சம் லிட்டராக இருந்தது.

**அட்டவணை – 5 : மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் விற்பனை**

| வ. எண். | ஒன்றியத்தின் பெயர் | நாளொன்றுக்கு சராசரி பால் விற்பனை லிட்டரில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 7,560 | 6,103 | 6,161 | 9,987 | 9,022 | 12,576 |
| 2 | விழுப்புரம் | 30,086 | 26,435 | 24,718 | 22,982 | 19,790 | 21,329 |
| 3 | வேலூர் | 87,847 | 79,164 | 79,896 | 81,563 | 69,609 | 69,173 |
| 4 | தர்மபுரி | 21,690 | 20,888 | 25,060 | 27,806 | 23,588 | 24,953 |
| 5 | சேலம் | 1,76,854 | 1,75,746 | 1,86,777 | 1,88,094 | 1,84,667 | 1,89,922 |
| 6 | ஈரோடு | 79,371 | 72,483 | 71,867 | 72,533 | 66,276 | 66,114 |
| 7 | கோயம்புத்தூர் | 1,58,175 | 1,48,606 | 1,49,880 | 1,49,010 | 1,37,578 | 1,42,015 |
| 8 | நீலகிரி | 16,543 | 16,226 | 17,955 | 17,315 | 16,501 | 16,493 |
| 9 | மதுரை | 1,46,605 | 1,57,789 | 1,64,767 | 1,60,159 | 1,53,843 | 1,56,317 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | திண்டுக்கல் | 15,155 | 13,668 | 14,756 | 13,707 | 11,117 | 10,757 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 1,11,284 | 1,12,991 | 1,20,382 | 1,18,974 | 1,16,436 | 1,17,873 |
| 12 | தஞ்சாவூர் | 19,529 | 18,766 | 20,556 | 22,329 | 20,114 | 22,440 |
| 13 | புதுக்கோட்டை | 6,830 | 6,819 | 8,336 | 10,941 | 10,789 | 11,616 |
| 14 | சிவகங்கை | 27,605 | 27,807 | 30,274 | 31,967 | 28,713 | 28,952 |
| 15 | விருதுநகர் | 10,623 | 8,768 | 7,378 | 6,012 | 4,118 | 5,127 |
| 16 | திருநெல்வேலி | 48,818 | 47,508 | 47,063 | 42,910 | 41,546 | 41,926 |
| 17 | கன்னியாகுமரி | 13,825 | 14,576 | 16,068 | 14,939 | 15,399 | 15,348 |
| | **மொத்தம்** | **9,78,400** | **9,54,343** | **9,91,894** | **9,91,228** | **9,29,105** | **9,52,931** |

மேலும் விற்பனையை அதிகரிக்க, விற்பனை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிய விற்பனை மண்டலங்களும் உருவாக்கப்பட உள்ளன.

## 5.3. சமன்படுத்தும் பால்பண்ணைகள்

தமிழகத்தில் ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய **5** சமன்படுத்தும் பால்பண்ணைகள் இயங்கி வருகின்றன.

உபரி பாலை பால் பவுடராகவும், வெண்ணெய்யாகவும் உருமாற்றம் செய்வதற்காக இந்த சமன்படுத்தும் பால்பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அனைத்து சமன்படுத்தும் பால் பண்ணைகளின் மொத்த உலர்திறன் நாளொன்றுக்கு 90 மெட்ரிக் டன் ஆகும். (ஈரோடு–40 மெ.ட., சேலம்–10 மெ.ட., கிருஷ்ணகிரி–10 மெ.ட., மதுரை–10 மெ.ட. மற்றும் திருவண்ணாமலை –20 மெ.ட.) மேலும், தேவைப்படும் பகுதிகளில் கூடுதல் பவுடர் தொழிற்சாலைகளை நிறுவ இணையத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. 2017–2018ஆம் ஆண்டு மேலும் பால் பவுடர் உற்பத்தி தொழிற்சாலைகள் நிறுவவும் ஆய்வுகள் செய்யப்பட உள்ளது.

## 5.4. ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலை

கால்நடைத் தீவன ஊட்டச்சத்து, கறவை மாட்டின் உற்பத்தித்திறன் மற்றும் சினை பிடித்தலுக்கு பெறும் பங்கு வகிக்கிறது. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சாலையை 1982ஆம் ஆண்டு முதல் இயக்கி வருகிறது. இத்தொழிற்சாலை, நாளொன்றுக்கு 150 மெட்ரிக்டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்யும்

வகையில் ரூ.20.36 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலையானது, 2016–2017 ஆம் ஆண்டில் 21,331 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்துள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளில், ஆவின் மூலம் மாவட்ட ஒன்றியங்களால் விற்பனை செய்யப்பட்ட கால்நடைத் தீவனத்தின் அளவு 13 மடங்காக உயர்ந்துள்ளது.

2017–2018ஆம் ஆண்டில் கால்நடை தீவன விற்பனையை 72,000 மெட்ரிக் டன்னாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இது பாலின் அளவு மற்றும் தரத்தை உயர்த்த வழிவகுக்கும்.

**அட்டவணை – 6: கால்நடைத்தீவனம் வழங்கிய விவரங்கள் (இணைப்பு–3)**

| ஆண்டு | மொத்தம் (மெட்ரிக் டன்) |
|---|---|
| 2010 – 11 | 4,612 |
| 2011 – 12 | 15,046 |

| | |
|---|---|
| 2012 – 13 | 31,093 |
| 2013 – 14 | 53,292 |
| 2014 – 15 | 51,702 |
| 2015 – 16 | 58,652 |
| 2016 – 17 | 60,770 |

கால்நடைத் தீவன விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, ஆவின் உற்பத்தி நீங்கலாக தரமான நிறுவனங்கள் மூலமும் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

## 5.5. தாது உப்புக் கலவைத் தொழிற்சாலை

தாது உப்புக்கலவை கால்நடைகளின் உற்பத்தித்திறன், பாலின் தரம், மற்றும் கறவை மாடுகளின் உடல் நலத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் நான்கு தாது உப்புக்கலவை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. 2017–18ஆம் ஆண்டில் தாது உப்புக்கலவை விற்பனையை 1,500 மெட்ரிக் டன்னாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை –7: <u>தாது உப்புக் கலவை வழங்கிய விவரங்கள் 2011–2017 (மெட்ரிக் டன்னில்) (இணைப்பு–4)</u>**

| ஆண்டு | மொத்தம் (மெட்ரிக் டன்) |
|---|---|
| 2011 – 12 | 171.60 |
| 2012 – 13 | 131.10 |
| 2013 – 14 | 390.67 |
| 2014 – 15 | 244.42 |
| 2015 – 16 | 966.08 |
| 2016 – 17 | 1,314.73 |

**2017–2018** ஆம் ஆண்டில் புதிதாக தாது உப்புக்கலவை தொழிற்சாலை நிறுவப்பட உள்ளது. இதனால் பாலின் தரம் மற்றும் கால்நடைகளின் பால் உற்பத்திதிறன் உயரும்.

## 6. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

மூன்று அடுக்கு பால் கூட்டுறவு அமைப்பில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மாநில அளவிலான ஒரு தலைமைச் சங்கமாக இயங்கி வருகிறது. **01.02.1981**ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இணையம் அதுவரை இயங்கி வந்த தமிழ்நாடு பால்வளம் நிறுவனத்தால்

மேற்கொள்ளப்பட்டு வந்த வணிக நடவடிக்கைகளான பால் கொள்முதல், பதனிடுதல், சிப்பம் கட்டுதல், நுகர்வோருக்கு பால் மற்றும் பால் உப பொருட்களை விற்பனை செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தலைமை அலுவலகங்கள் சென்னை மாதவரம் பால்பண்ணையில் உள்ள ஆவின் இல்லத்தில் அமைந்துள்ளன. இணையத்தின் ஒட்டுமொத்த நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இணையத்தின் நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிர்வாகக்குழு 17.07.2013 அன்று பொறுப்பேற்றுள்ளது. இணையத்தில், தினசரி நிர்வாக செயல்பாடுகள், இணைய நிர்வாக இயக்குநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இணையம், பல்வேறு மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால் கொள்முதல் செய்து, சென்னை மாநகரப் பகுதி பால் நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக 'ஆவின்' என்ற வணிக பெயரில் விற்பனை செய்கிறது.

இணையம், விற்பனை உதவி உட்பட தேவையான தொழில்நுட்ப உதவிகளையும், ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது.

இணையத்தின் கட்டுப்பாட்டில், சென்னையில் மாதவரம், அம்பத்துார் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய **3** பால் பண்ணைகளும், அம்பத்தூரில் ஒரு பால் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலையும் மற்றும் திருவண்ணாமலையில் பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை ஒன்றும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை தொகுப்பு பின்வருமாறு.

**அட்டவணை–8: <u>தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை திறன்</u>**

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிர்வாக இயக்குநர் | 1 |
| 2 | இணை நிர்வாக இயக்குநர் | 1 |
| 3 | தலைமை விழிப்பு பணி அலுவலர் | 1 |
| 4 | பொது மேலாளர்கள் | 9 |
| 5 | துணைப் பொது மேலாளர் | 24 |
| 6 | உதவிப் பொது மேலாளர் | 60 |

| | | |
|---|---|---|
| 7 | மேலாளர் | 108 |
| 8 | துணை மேலாளர் | 173 |
| 9 | செயல் அலுவலர்கள் | 448 |
| 10 | ஓட்டுநர்கள் | 234 |
| 11 | தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் | 1,031 |
| | **மொத்தம்** | **2,090** |

## 6.1. மாதவரம் பால்பண்ணை

தமிழ்நாட்டில் மிக பழமையான பால் பண்ணையான மாதவரம் பால்பண்ணை, நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கையாளும் திறனுடன், நியூசிலாந்து அரசின் நிதியுதவியுடன் கொழும்பு திட்டத்தின் கீழ், 1962ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

கடந்த ஆறு ஆண்டுகளில் ரூ.7 கோடி செலவில் உட்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டதன் மூலம் தற்போது மாதவரம் பால்பண்ணையின் கையாளும் திறன் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் கையாளும் அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ளது.

மாதவரம் பால்பண்ணை வடசென்னை பால் நுகர்வோருக்கு, பதப்படுத்திய பாலை 47 வாடகை தடவண்டிகள், 20 தனியார் முகவர் வண்டிகள் மற்றும் 2 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க பால் வழித்தடங்கள் மூலம் விநியோகிக்கிறது.

இந்த பால்பண்ணை IS/ISO 9001:2008, IS 15000:1998 (HACCP) மற்றும் IS/ISO 14001:2004(EMS) தரச் சான்றுகள் பெற்றுள்ளது.

2017–18 ஆம் ஆண்டில் பால் பாக்கெட் குளிர்பதன இருப்பு அறை வசதிகள் மேம்படுத்தப்படும்.

**6.2. அம்பத்தூர் பால்பண்ணை**

அம்பத்தூர் பால்பண்ணை, நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுடன் 1976ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மத்திய சென்னை நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் கடந்த 6 ஆண்டுகளில் ரூ.7.5 கோடி செலவில் உட்கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டு அம்பத்தூர் பால்பண்ணையின் கையாளும் திறன் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

இந்த பால்பண்ணை IS/ISO 9001:2008, IS 15000:1998 (HACCP) மற்றும் IS/ISO 14001:2004(EMS) தரச் சான்றுகள் பெற்றுள்ளது.

**2017–2018** ஆம் ஆண்டில் குளிர்சாதன வசதிகள் மேம்படுத்தப்படும்.

### 6.3. சோழிங்கநல்லூர் பால்பண்ணை

தென்னிந்தியாவின் முதல் கணினி மயமாக்கப்பட்ட சோழிங்கநல்லூர் தானியங்கி பால்பண்ணை, நாளொன்றுக்கு **4** இலட்சம் லிட்டர் பால் கொள்ளளவுடன் **1996**ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில், தானியங்கி பால்வழங்கும் நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு **3.50** இலட்சம் லிட்டர் பால், மொத்த பால் விற்பனைக்காக, லாரிகள் மூலமாகவும், **50,000** லிட்டர் பாலை பாக்கெட் பாலாகவும் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டு, சோழிங்கநல்லூர் பால் பண்ணை ஏற்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, பின்னர் ஏற்பட்ட மாறுபட்ட சந்தை சூழ்நிலை மற்றும் தேவைக்கேற்ப படிப்படியாக மொத்த பால் விற்பனையிலிருந்து பாக்கெட் பால் விற்பனைக்கு மாற்றப்பட்டது. தற்போது, சோழிங்கநல்லூர்

பால் பண்ணை நாளொன்றுக்கு 4.50 இலட்சம் லிட்டர் பாலை கையாண்டு வருகிறது.

தென் சென்னை மற்றும் புறநகர் நுகர்வோர்களின் பெருகி வரும் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் கடந்த ஆறு (2011–2017) ஆண்டுகளில் ரூ.10 கோடி செலவில் உட்கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டதன் மூலம் சோழிங்கநல்லூர் பால் பண்ணையின் கையாளும் திறன் நாளொன்றுக்கு 6 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

மேலும், தற்போது நாளொன்றுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 100–110 லிட்டர் எரி எண்ணெய்க்கு பதிலாக, நாளொன்றுக்கு 1000–1100 கிலோ/ச.செ.மீ. நீராவி தயாரிக்கும் திறன் கொண்ட புதிய சூரிய ஒளி செறிவூட்டி ரூ.100 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.12 இலட்சம் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பால்பண்ணை IS/ISO 9001:2008, IS 15000:1998 (HACCP) மற்றும் IS/ISO 14001:2004(EMS) தரச் சான்றுகள் பெற்றுள்ளது.

2017–18 ஆம் ஆண்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கையாளும் திறன் உயர்த்தப்படும்.

## 6.4. திருவண்ணாமலை பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை

திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.72.60 கோடி செலவில், நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் பால்பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் ஒரு அலகாக 11.11.2014 அன்று நிறுவப்பட்டுள்ளது.

புதிதாக, 250 மெட்ரிக் டன் வெண்ணெய் மற்றும் 500 மெட்ரிக் டன் பால்பவுடர் சேமித்து வைக்கக்கூடிய கூடுதல் கிடங்கு ரூ.476.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பால்பண்ணை ISO 22000: 2005(FSMS) தரச் சான்று பெற்றுள்ளது.

2017–2018 ஆம் ஆண்டில் இப்பால்பவுடர் தொழிற்சாலையில் போதிய வசதி உள்ளதால், பால் உபபொருட்கள் தயாரிக்கப்பட உள்ளது.

## 6.5. அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை

சென்னை அயனாவரத்தில் 1976ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த பால் பொருட்கள் தொழிற்சாலை அம்பத்தூருக்கு மாற்றப்பட்டு, 2003ஆம் ஆண்டு முதல் அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையாக இயங்கி வருகிறது. சென்னை அம்பத்தூரில் ரூ.23.46 கோடி செலவில் புதியதொரு பால் பொருட்கள் தொழிற்சாலை 2015 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்புதிய பால் பொருட்கள் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கீரிம் மற்றும் 1000 கிலோ பனீர் தயாரிக்கும் திறன் கொண்டது. துவக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே ஐஸ்கீரிம் தயாரிப்பில் 75 சதவிகித கொள்திறன் பயன்பாட்டை அடைந்துள்ளது.

அதே வளாகத்தில் நாளொன்றுக்கு 40,000 லிட்டர் நொதித்தல் முறையில் பால் பொருட்கள் (தயிர், மோர், லஸ்ஸி, போன்றவை) தயார் செய்யும் அலகு ரூ.9.18 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு 21.09.2016 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணையிலிருந்து 109 வகையான பால் பொருட்கள் தயார்செய்யப்பட்டு

22 ஒப்பந்த வாகனங்கள் மற்றும் 5 குளிர் பதன வாகனங்கள் மூலம் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

ஐஸ்கிரீம் மற்றும் இதர சில பால் பொருட்களும் மூன்று குளிரூட்டும் வாகனங்கள் மூலமாக மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேலும் மூன்று குளிர்பதன வாகனங்கள், ரூ.81 இலட்சம் மதிப்பில் பயன்பாட்டிற்கு 19.05.2017 அன்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

ஆவின், 19.04.2017 அன்று 1/2 கிலோ தயிர் பாக்கெட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு கிலோ பக்கெட் பிரிமியம் தயிர், உலர் பழ கலவை பவுடர், ரசகுல்லா, புதுவகை சாக்லேட்கள், பிஸ்கேட்டுகள் ஆகியன அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2017–2018 ஆம் ஆண்டில் மாதம் ஒரு புதிய பால் உபபொருள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

## 6.6. கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைபண்ணை உதகமண்டலம்

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணை 1973ஆம் ஆண்டு உதகமண்டலத்தில் நிறுவப்பட்டது. இப்பண்ணை, பொலிகாளைகள் தாய்ப்பண்ணை மற்றும் பொலிகாளை பண்ணை ஆகிய இரண்டு பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. பொலிகாளைப் பண்ணை, வனத்துறையிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட 37.725 ஏக்கர் நிலப்பரப்பிலும், பொலிகாளைகளின் தாய்ப் பண்ணை, வருவாய்த் துறைக்குச் சொந்தமான 46.33 ஏக்கர் நிலப்பரப்பிலும் இயங்கி வருகின்றன.

### 6.6.1. பொலிகாளைகளின் தாய் பண்ணை

கால்நடை இன விருத்திக்கான நல்ல தரமான உறைவிந்து குச்சிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான, அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின ஜெர்சி காளைகளை உற்பத்தி செய்யக் கூடிய உயர்ரக ஜெர்சி பசுக்கள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணை அமைந்துள்ள காக்காத்தோப்பில், கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்திற்காக ஓட்ஸ், மைஸ் மற்றும் கிக்கியூ புல்வகைகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

### 6.6.2. பொலிகாளை பண்ணை

உறைவிந்து குச்சிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹால்ஸ்டீன் பிரீசியன் மற்றும் கலப்பின ஹால்ஸ்டீன் பிரீசியன் இன காளைகள் இங்கு பராமரிக்கப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் உறைவிந்து குச்சிகள், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு முறையே, ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது, கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணையில் இருக்கும் சுமார் 134 காளைகளில் 95 காளைகள் உறைவிந்து சேகரிப்பிற்காக பயன்படுத்தப் படுகின்றன. இந்த பண்ணையில், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பத்து ஜெர்சி பொலிகாளைகள் மற்றும் ஒரு ஹால்ஸ்டீன் பிரீசியன் பொலிகாளைகள் ஆக பதினொன்று பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப் பண்ணை, வருடத்திற்கு

தோராயமாக **16.00** இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்து வருகிறது.

**2017–2018**ல், **25** புதிய காளைகளை விந்து சேமிப்பிற்கு பயன்படுத்தி தோராயமாக **18.00** இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.7. எருமை இன உறைவிந்து நிலையம் – ஈரோடு

அனைத்து மாவட்ட ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில், உதகமண்டலம் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பசு இன உறை விந்து குச்சிகள் இந்த நிலையத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையத்தின் மூலம், தற்போது, மாதம் ஒன்றிற்கு தோராயமாக **1.67** இலட்சம் உறைவிந்து குச்சிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையம், கால்நடை பராமரிப்புத் துறையிடமிருந்து பிரதி மாதம் கொள்முதல் செய்யப்படும் சுமார் **10,000** எருமை இன உறைவிந்து குச்சிகளையும், ஒன்றியங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

வம்சாவழி சோதனைத் திட்டத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட காளைக் கன்றுகளும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2017–2018 ஆம் ஆண்டில் கால்நடைகளின் தேவைக்காக தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படும்.

## 6.8. கறவை இன மேம்பாட்டு திட்டம் (Dairy Herd Improvement Programme Actions (DIPA)), ஈரோடு

கறவை இன மேம்பாட்டு திட்ட நடவடிக்கைகள் அலகும் ஈரோட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த அலகில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன

### 6.8.1. வம்சாவழி சோதனைத் திட்டம் (Progeny Testing Programme-PTP)

அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின பொலிகாளைகளை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, சேலம், ஈரோடு, தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், இந்திய அரசின் நிதி உதவியுடன், வம்சாவழி

சோதனைத் திட்டம் இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 6.8.2. களவெளி செயல்திறன் பதிவுத் திட்டம் (Field Performance Recording Programme-FPRP)

களவெளி செயல்திறன் பதிவு திட்டத்தின் கீழ், கலப்பின ஜெர்சி இன கறவைகளின் பால் அளவைக் கணக்கிட்டு, திறன் நிரூபணம் செய்யப்பட்ட காளைகளின் உறைவிந்து மூலம் கருவூட்டல் செய்யப்பட்டு, அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இத்திட்டம், இந்திய அரசின் நிதி உதவியுடன், சேலம், தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு மாவட்ட ஒன்றியங்களில், இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் கூட்டுறவு அமைப்பின் கீழ் இயங்கி வரும் நான்கு உறைவிந்து குச்சி நிலையங்களுக்கு உறைவிந்து குச்சிகள்

உற்பத்தி செய்ய, இதுவரை **332** ஜெர்சி கலப்பின காளைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 6.9. பால் விற்பனை

சென்னை பெருநகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் ஆவின் பால் விற்பனையை இணையம் மேற்கொள்கிறது. சென்னை பெரு நகரில் ஆவின் நிறுவன பொருட்களே அதிக அளவில் விற்பனை ஆகின்றன. சராசரியாக நாளொன்றுக்கு **11.35** இலட்சம் லிட்டர் பால் சென்னை பெருநகரில் விற்பனை செய்யப் படுகிறது.

**அட்டவணை –9 : <u>பால் விற்பனை விலை</u>**

| வ. எண் | பாலின் வகை | பால் பை நிறம் | விவரம் | | 500 மில்லி லிட்டருக்கான விலை – ரூபாயில் | |
|---|---|---|---|---|---|---|
| | | | கொழுப்பு சத்து % | கொழுப்பு அல்லாத இதர சத்து % | அட்டை தாரர் களுக்கு | அதிகபட்ச சில்லறை விற்பனை விலை |
| 1 | இருநிலை சமன் படுத்திய பால் | மெஜந்தா | 1.5 | 9.0 | 16.50 | 17.00 |
| 2 | சமன்படுத்திய பால் | நீலம் | 3.0 | 8.5 | 17.00 | 18.50 |
| 3 | நிலைப்படுத்திய பால் | பச்சை | 4.5 | 8.5 | 19.50 | 20.50 |
| 4 | கொழுப்புச்சத்து நிறைந்த பால் | ஆரஞ்சு | 6.0 | 9.0 | 21.50 | 22.50 |

## 6.10. பெருநகரில் உள்ள விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்

சென்னை பெருநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை இணையம் மேற்கொண்டு வருகிறது.

ஆவினின் பல்வேறு வகையான பொருட்கள், நுகர்வோர்களிடையே மிகவும் பிரபலமடைந்துள்ளன. பால் மற்றும் பால் பொருட்கள் அதிக அளவிலான நுகர்வோர்களை சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், இணையம், சிறந்ததொரு பின்னல் வலை அமைப்பைக் கொண்டுள்ளது.

**அட்டவணை – 10: விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்**

| வ. எண் | உட்கட்டமைப்பு விவரம் | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 |
|---|---|---|---|---|---|
| 1 | விநியோக வழித்தடங்கள் | 113 | 117 | 119 | 132 |
| 2 | வட்டார அலுவலகங்கள் | 16 | 16 | 16 | 16 |
| 3 | பால் வழங்கும் நிலையங்கள் | 470 | 470 | 433 | 437 |
| 4 | விநியோகிக்கும் இடங்கள் | 311 | 311 | 361 | 376 |
| 5 | பாலகங்கள் | 93 | 93 | 114 | 147 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | மொத்த பால் விநியோகிப்பாளர்கள் | 47 | 71 | 71 | 83 |
| 7 | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் | 49 | 49 | 49 | 49 |
| 8 | ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் | 184 | 202 | 451 | 556 |
| 9 | பால் பொருட்கள் விநியோக வழித்தடங்கள் | 14 | 16 | 25 | 33 |

## அட்டவணை – 11: <u>2016–2017–ம் ஆண்டில் சென்னை பெருநகரில் பால் பொருட்கள் விற்பனை (இணைப்பு –7)</u>

| வ. எண் | விவரம் | அலகு | மொத்தம் | |
|---|---|---|---|---|
| | | | அளவு | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
| I | <u>அம்பத்தூர் பால் உபபொருட்கள்</u> | | | |
| 1 | ஐஸ் கிரீம் | லி. | 12,09,158 | 2,555.73 |
| 2 | குலோப்ஜாமுன் | கி.கி | 48,144 | 155.71 |
| 3 | கோவா | மெ.டன் | 3,07,296 | 1,221.83 |
| 4 | பால் பேடா | மெ.டன் | 23,842 | 91.95 |
| 5 | பனீர் | மெ.டன் | 63,860 | 194.04 |
| 6 | மோர் | லி. | 5,98,232 | 162.44 |
| 7 | மைசூர் பா | மெ.டன் | 42,538 | 187.86 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | யோகர்ட் | எண்ணிக்கை | 88,189 | 15.11 |
| 9 | லஸ்ஸி 200 மிலி | லிட்டர் | 2,40,626 | 236.15 |
| 10 | தயிர் 200 மிலி | லிட்டர் | 4,34,973 | 296.59 |
| 11 | சுடு பால் | லிட்டர் | 8,32,051 | 415.33 |
| 12 | எப்எம் "என்" ரிச் | எண்ணிக்கை | 2,47,178 | 46.14 |
| 13 | மில்க் ஷேக் | எண்ணிக்கை | 29,697 | 18.60 |
| 14 | நறுமணப்பால் | லிட்டர் | 9,896 | 9.89 |
| 15 | பீசா / சான்ட்விச் | எண்ணிக்கை | 2,61,898 | 103.99 |
| 16 | மில்க் சாக்லெட் | எண்ணிக்கை | 1,87,286 | 51.58 |
| 17 | சிறப்பு இனிப்புகள் | மெ.டன் | 7,874 | 56.47 |
| | **மொத்தம் (I)** | | | **5,819.44** |
| **II** | **ஒன்றிய பால் பொருட்கள்** | | | |
| 1 | வெண்ணெய் (சமையல்) | மெ.டன் | 1,036.18 | 3,598.90 |
| 2 | வெண்ணெய் (உப்பு) | மெ.டன் | 22.41 | 78.06 |
| 3 | நெய் | மெ.டன் | 1,770.75 | 6,729.95 |
| 4 | நிலைப்படுத்தப்பட்ட பால் (டெட்ரா பேக்) – 1000 மிலி | எண்ணிக்கை | 24,194.00 | 16.35 |
| 5 | நறுமணப்பால் 200 மிலி | எண்ணிக்கை | 15,44,477 | 274.78 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | மாவின் பானம் 200மிலி | எண்ணிக்கை | 1,04,957 | 14.38 |
| 7 | மில்க் ஷேக் டெட்ரா பேக்கில் | எண்ணிக்கை | 29,00,784 | 484.81 |
| 8 | ஆவின் டிலைட் (டெட்ரா பினோ) | லிட்டர் | 1,01,905 | 51.14 |
| 9 | ஸ்கிம்டு மில்க் பவுடர் | மெ.டன் | 41,662 | 122.66 |
| 10 | பாதாம் மில்க் பவுடர் | மெ.டன் | 87,600 | 337.71 |
| 11 | மோர் (டெட்ராபேக்) | எண்ணிக்கை | 3,42,281 | 50.66 |
| 12 | ஊட்டி டீ | மெ.டன் | 1,357 | 1.92 |
| | **மொத்தம் (II)** | | | **11,761.95** |
| | **ஒட்டுமொத்தம் (I) + (II)** | | | **17,581.38** |

## 6.11. விற்பனை வருவாய் விவரம்

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் விற்பனை வருவாய் **2010–2011**ஆம் ஆண்டில் ரூ.**2,369** கோடியாக இருந்தது, **2016–2017**ம் ஆண்டில் இரண்டு மடங்குக்கும் மேலாக ரூ.5,281 கோடியாக உயர்ந்துள்ளது. **(இணைப்பு – 8)**

## 6.12. எதிர்கால விற்பனை உத்திகள்

- விற்பனையை அதிகரிக்க, 30 விற்பனை செயல் அலுவலர்கள், செயல்பாடு ஊக்கத் தொகையுடன், ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.
- 2017–2018ல் புறநகர் பகுதிகளை உள்ளடக்கி 12 புதிய மண்டல விற்பனை அலுவலகங்கள் அமைக்கப்படும்.
- மாநிலம் முழுவதும், 3 ஆயிரம் மாணவர்களுக்கு மேல் படிக்கும் பள்ளிகளில் புதிய ஆவின் பாலகங்கள் நிறுவப்பட உள்ளது.
- பெருகி வரும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களுக்கான தேவையை எதிர்கொள்ளவும் விற்பனைச் சந்தையினை விரிவாக்கவும் மாநிலம் முழுவதும் 7 மண்டல விற்பனை அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.

## 6.13. நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்

கட்டணமில்லா தொலைபேசியுடன் (எண். 1800–425 – 3300) கூடிய **24 X 7** மணிநேர **நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்** ஒன்று சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் விற்பனைப் பிரிவில் **04.09.2003** முதல் இயங்கி வருகிறது. நுகர்வோர் இம்மையத்தை அணுகி தங்களது கருத்துக்களை பதிவு செய்யவும், குறைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளவும் இயலும். கடந்த **2016–2017**ஆம் ஆண்டில் மொத்தம் **647** புகார்கள் பெறப்பட்டு, உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

**2017–2018** ஆம் ஆண்டில் பால்நுகர்வோர்கள் நலன்கருதி குடியிருப்போர் நல சங்கங்கள் மற்றும் தொடர்புடைய நலச்சங்க பிரதிநிதிகளுடன் நேரடியாக, பல்வேறு இடங்களில் கலந்துரையாடல் மேற்கொண்டு, தகுந்த ஆலோசனைகள் பெறப்பட்டு விற்பனை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 7. திட்டங்கள்

### 7.1. தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டம்

இதுவரை செயல்பாட்டில் இருந்த திட்டங்களான, தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம், தீவிர பால் பெருக்குத்திட்டம் மற்றும் கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு திட்டம் ஆகியவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு, **2014–2015**ம் ஆண்டு முதல், தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் என ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

#### 7.1.1. தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டத்தின் நோக்கங்கள்

கிராம அளவில் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து தரமான பாலை வெளிப்படையான முறையில் கொள்முதல் செய்ய தேவையான உட்கட்டமைப்பை உருவாக்குவதே தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **2014–2015** முதல் **2016–2017** வரை, இணையம், திருச்சி மற்றும் மதுரை ஒன்றியங்களுக்கான மூன்று திட்டங்களுக்கு ரூபாய் **40.16** கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டம் பாடலூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர்

பால் பதப்படுத்தும் திறன் கொண்ட புதிய பதப்படுத்தும் ஆலை அமைக்கப்பட்டது. இது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 07.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மதுரை பால் பண்ணையில் ஏற்கெனவே இருந்த பாலில் உள்ள நீரை ஆவியாக்கும் இயந்திர நிலையத்திற்கு (Milk condensing Plant) மாற்றாக நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலில் உள்ள நீரை ஆவியாக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை, மொத்தத் தொகையான ரூ.18.08 கோடியில், மத்திய அரசு ரூ. 17.40 கோடியை விடுவித்துள்ளது.

2017–2018 ஆம் ஆண்டில் மீதம் உள்ள தொகை பெறப்பட்டு பணிகள் விரிவுப்படுத்தப்படும்.

நடப்பு 2017–2018 ஆம் ஆண்டில், நாளொன்றுக்கு 500 லிட்டருக்கு மேல் பால் கொள்முதல் செய்யும் 720 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு, தானியங்கி பால் கொள்முதல் மற்றும் பகுப்பாய்வு அலகுகள், ரூ.15.824 கோடி மதிப்பீட்டில் வழங்க இந்திய அரசுக்கு விரிவான கருத்துரு அனுப்பப் பட்டுள்ளது. இது தவிர, 500 லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யும் 220 கிராமங்களில் இருக்குமிடத்திலேயே பால் கொள்முதல்

செய்யும் விதத்தில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படும்.

### 7.2. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்

மாநிலம் முழுவதும் ரூ.202.95 கோடி முதலீட்டில், சிறந்த உபகரணங்கள் நிறுவி வலுப்படுத்தியதில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்ட நிதி முக்கிய பங்கு வகிக்கிறது.

கடந்த 6 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான திட்டங்கள் பின்வருமாறு:

- கூடுதலாக மூன்று இலட்சம் லிட்டர் பால் சேமிக்கத் தேவையான குளிரூட்டும் அறை வசதி
- ஈரோடு, சேலம் மற்றும் கோயம்புத்தூரில் 894 மெட்ரிக் டன் கொள்ளளவில் வெண்ணெய் உறை கிடங்கு வசதி
- வெப்பம் சார்ந்த அச்சுப்பொறியுடன் 25 அதிவேக மற்றும் 11 மித வேக புதிய பால் பைகள் நிரப்பும் இயந்திரங்கள்
- அம்பத்தூர் பால் பொருட்கள்பண்ணையில் நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும்

1,000 கிலோ பனீர் தயாரிக்கும் திறன் கொண்ட உற்பத்தி வசதி.

- சேலம் பால் பண்ணையில் உயர் வெப்ப நிலையில் 200 மி.லி. பால் சிப்பம் (Tetra Pack)கட்டும் வசதி
- சொந்த பால் போக்குவரத்து வசதிகள் வலுப்படுத்த 48 பால் டேங்கர்கள் கொள்முதல் செய்யப்பட்டது.
- சேலம் பால் பண்ணையில், ஒரு மணி நேரத்தில் 1,000 மி.லி. ஆக 6,000 பால் சிப்பம் கட்டும் திறன் கொண்ட (நோய் நுன்மங்கள் ஒழிக்கப் பெற்ற) நிரப்பும் இயந்திரம் (Aseptic filling machine)

இத்திட்டத்தின் கீழ், 2017–2018 ஆம் ஆண்டிற்கு, ரூ.33.42 கோடி மதிப்பிலான 4 திட்டங்களுக்கான முன்மொழிவுகள், மாநில அளவிலான ஒப்பளிப்பு குழுவால், அனுமதிக்கப் பட்டுள்ளது. **(இணைப்பு – 5)**

## 7.3. நபார்டு நிதியுதவி திட்டம் (Schemes under financial assistance of NABARD)

மாநில அரசானது, பால் கூட்டுறவு தொழிலுக்கு தேவையான உத்வேகத்தை, நபார்டு கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியின் மானியம் மூலம் வழங்கி உள்ளது. கடந்த 2014–2015, 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளில் ரூ.158.67 கோடி ஒப்பளிக்கப் பட்டுள்ளது.

இத்திட்ட நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான பணிகள் பின்வருமாறு:

- ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலையை நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் தயாரிக்கும் வகையில் சீரமைத்தது.
- கோயம்புத்தூர் பால் பண்ணையை நவீனப்படுத்துதல் மற்றும் கையாளும் திறனை 2 இலட்சம் லிட்டரிலிருந்து நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டராக உயர்த்தும் வகையில் விரிவாக்கம் செய்தல்.

- வேலூர் பால் பண்ணையில், ஒரு இலட்சம் லிட்டர் பால் சிப்பம் கட்டுதல் மற்றும் குளிர்விக்கும் அறை வசதிகள்.

- திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அதி நவீன பாலகங்கள்

- நாளொன்றுக்கு **1.65** இலட்சம் லிட்டர் பால் கொள்ளளவு கொண்ட **33** மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல் ஈரோடு **(27)**, தருமபுரி **(5)** மற்றும் விருதுநகர் **(1)**

### 7.4. தேசிய பால்வளத் திட்டம்–I (National Dairy Plan-I-NDP)

### 7.4.1. வம்சாவழி சோதனைத் திட்டம்

தேசிய பால்வளத் திட்டத்தின் கீழ், கலப்பின ஜெர்சி பசுக்களுக்கு வம்சாவழி சோதனைத் திட்டம் ரூ.**39.28** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், **2012–2013** முதல் வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப் பட்டு, **2018–2019** ம் ஆண்டு

முடிவில் அதிக பால் உற்பத்தி மரபுத்திறன் உள்ள 247 பொலி காளைகள் உற்பத்தி செய்யப்படும்.

கறவைகளின் பால் உற்பத்தித் திறன் அளவுகளான பால் உற்பத்தி அளவு, பாலின் தரம், பால் உற்பத்தி மரபுத் திறன் அடிப்படையின் மூலம், பிறந்த கிடாரி கன்றுகளின் செயல்பாடுகளை கொண்டு காளைகளின் தரம் வரிசைப்படுத்தப் பட்டு, அதிக பால் உற்பத்திக்கான மரபுத் திறன் கொண்ட உறைவிந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

### 7.4.2. உதகமண்டலம் ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணைஉறை விந்து நிலையத்தை மேம்படுத்துதல்

தேசிய பால்வளத்திட்டத்தின் கீழ், உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணை உறை விந்து நிலையம் ரூ.1,434.74 இலட்சம் மானிய ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், ஆத்தூரில் இளம் காளை கன்றுகளை பராமரிக்கும் கொட்டகையின் சுற்றுச் சுவர் அமைப்பது மட்டுமல்லாமல், ஈரோட்டில் இளம் காளை கன்றுகளை பராமரிக்கும் கொட்டகை (quarantine), புதுக்குடியில் கன்று வளர்ப்பு நிலையம் மற்றும் உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி கருவூல பொலிகாளை

பண்ணை கட்டுமானப் பணிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வழிவகை செயய்யப்பட்டுள்ளது.

இது தவிர பல்வேறு வகையான ஆய்வக உபகரணங்கள், பண்ணை கருவிகள் மற்றும் ICT கருவிகளும் இத்திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

### 7.4.3. கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம்

தேசிய பால்வள திட்டம்–Iன் கீழ், கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, வேலூர், திருச்சி மற்றும் காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஆகிய ஆறு பால் ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், **14**–மொத்த பால் குளிர்விப்பான்கள், **279**–தானியங்கி பால் சேகரிக்கும் கருவிகள் மற்றும் **1333**–பால் கேன்கள் வழங்கப்பட்டுள்ளது. சங்க பணியாளர்கள், சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.**1,255.37** இலட்சம் ஆகும். **2014–2015** முதல் **2016–2017**ஆம் ஆண்டு வரையிலான மூன்று

ஆண்டுகளுக்கான இத்திட்ட காலம், **2018–2019** வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலமாக, தூய பால் உற்பத்தியுடன், கறந்த பாலின் தரத்திலும் உயர்வு காணப்படும்.

### 7.4.4. சமச்சீர் கால்நடை தீவன திட்டம் (Ration Balancing Programme)

தேசிய பால்வளத் திட்டம்–I கீழ், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, விழுப்புரம், வேலூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல், தருமபுரி, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஆகிய **11** பால் ஒன்றியங்களில், ரூ.**2176.22** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், **2014–2015** முதல் **2018–2019** வரையுள்ள ஐந்து ஆண்டுகளுக்கு, சமச்சீர் கால்நடை தீவனத் திட்டம் (முதல் கட்டம்) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உள்ளூரில் கிடைக்கும் தீவன பொருட்களைக் கொண்டு, குறைந்த செலவின சூத்திரம் தயாரித்து, கால்நடைத் தீவன செலவை குறைப்பதை இத்திட்டம் இலக்காக கொண்டுள்ளது. இக் குறைந்த செலவின சூத்திரம்

2.0 இலட்சம் உறுப்பினர்களை கவரும் வகையில் இதுவரை 1.85 இலட்சம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் கால்நடை தீவன செலவில், லிட்டர் ஒன்றிற்கு ரூ. 1 முதல் ரூ. 3 வரை குறைந்துள்ளதோடு, கறவை மாட்டின் பால் உற்பத்தி 300 முதல் 500 மிலி அதிகரித்துள்ளது.

## 7.5. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேலாண்மை அமைப்பு (IDMS)

கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் முதல் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் வரையிலான அனைத்து சங்க செயல்பாடுகளையும் கணினி மயமாக்குதல் மற்றும் தானியங்கல் மூலம் ரூபாய் 46.55 கோடி செலவில் ஒருங்கிணைத்திட ஏதுவாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.18.34 கோடியை 100 சதவிகிதம் மானியமாக ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்திட்டம், டிசம்பர் 2017ல் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8. பெரும் திட்டங்கள்

### 8.1. மதுரை பால் பண்ணை விரிவாக்கம்

மதுரை பால் பண்ணை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடன் 1967ம் ஆண்டு துவக்கப்பட்ட இந்தியாவின் மிக பழமையான பால் பண்ணையாகும். தற்போது ரூ.37.54 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இத்துடன் 2 இலட்சம் லிட்டர் பால் சிப்பம் கட்டும் திறனுடைய பிரிவுடன் 2 இலட்சம் லிட்டர் பால் குளிர்விக்கும் அறை, ஒருங்கிணைந்த குளிர்பதன அமைப்பு, ஹோமோஜினைசர்கள், பதப்படுத்துதல் போன்ற பணிகளும் இதில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 8.2. சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் உயர் வெப்பநிலையில் பால் பதப்படுத்துதல்

சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தி உயர் வெப்ப நிலையில் சிப்பம் கட்டும் திறன் கொண்ட (நோய் நுன்மங்கள் ஒழிக்கப் பெற்ற) சிப்பம் கட்டும் அலகு (Aseptic packing machine) ஒன்று ரூ.34 கோடி செலவில் நிறுவும் பணி நடைபெற்று

வருகிறது. அறை வெப்ப நிலையில் பாலை 90 நாட்கள் வரை பயன்படுத்தலாம் என்பதே இதன் தனிப்பட்ட சிறப்பம்சமாகும். இத்திட்டம் ஜனவரி 2018ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி சந்தை மற்றும் நுகர்வோர்களை கவர்ந்து ஆவின் நிறுவனத்தின் சந்தை பங்களிப்பை மேலும் விரிவாக்கம் செய்வதை இத்திட்டம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

## 8.3. வெண்ணெய் மற்றும் பால் பவுடர் சேமிப்பு கிடங்கு வசதிகளை அதிகரித்தல்

தடையில்லா விற்பனையை உறுதி செய்யவும், சேமிப்பு கிடங்குகளில் கொள்ளளவு தன்னிறைவு பெறுவதற்கும் 1,000 மெட்ரிக்டன் பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு மற்றும் 1,330 மெட்ரிக்டன் வெண்ணெய் ஆழ் உறைகிடங்கு வசதிகள் உருவாக்கப்பட்டன. திருநெல்வேலி, மதுரை, திருவண்ணாமலை மற்றும் திருச்சி பால் பண்ணைகளில் ரூ.10.51 கோடி செலவில் 1,120 மெ.டன் கொள்ளவு திறன் கொண்ட வெண்ணெய் சேமிப்பு வசதி பணிகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் ரூ.4.74 கோடி செலவில் மதுரை, திருவண்ணாமலை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால்பண்ணைகளில் 1,725 மெட்ரிக்டன் அளவுள்ள பால் பவுடரை சேமித்து வைப்பதற்கான, சேமிப்பு கிடங்குகள்

கட்டப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் அனைத்தும் ஆகஸ்டு 2017ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8.4. நந்தனத்தில் வாடிக்கையாளர் உதவி மையம் மற்றும் நிர்வாக அலுவலக கட்டிடம்

நந்தனத்தில் வாடிக்கையாளர் உதவி மையம் மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டிடத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 1,13,000 சதுரஅடி மொத்த பரப்பளவும், ஒன்பது மாடிகள் கொண்டதாகவும் உள்ள இக்கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணிகள் அனைத்தும் அக்டோபர் 2017–க்குள் முடிவுறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 8.5. அதி நவீன பாலகம்

ஆவின் நிறுவனம் மீதான பார்வையை அதிகரிக்கும் பொருட்டும் ஆவின் வணிக சின்னத்தை விளம்பரப்படுத்தும் நோக்குடனும் குழந்தைகள் விளையாடும் இடம், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் குளிர்பதன வசதியுடன் இருக்கை அறை ஆகியன அடங்கிய அதி நவீன பாலகங்கள் சென்னை மாநகர் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் ரூ.10 கோடி மதிப்பில் 16 அதி நவீன பாலகங்களும் மாவட்டங்களில் ரூ.8.68 கோடி மதிப்பில் 27 அதிநவீன பாலகங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## 8.6. பால் பண்ணைகளில் மரபு சாரா எரிசக்தி பயன்பாடு

பசுமை முனைப்பாடுகளை முன்னேற்றப்படுத்த பால் பண்ணை செயல்பாடுகளில் மரபு சாரா எரிசக்தி பயன்பாட்டினை அறிமுகப்படுத்த ஆவின் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த வகையில் 8 பால் பண்ணைகள், 4 குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் 100 மொத்த பால் குளிர்விப்பான்கள் ஆகியவற்றில் சூரிய ஒளி மூலம் 80° செல்சியஸ் வெப்பத்தில் 1.11 இலட்சம் லிட்டர் சுடுநீர் தயாரிக்கும் திறன் கொண்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சேலம் பால் பண்ணையில் 2 எண்ணிக்கை கொண்ட ஒரு சூரிய ஒளி குவிநோக்கி (Concentrated Solar Thermal System) நிறுவப்பட்டுள்ளது. இது போன்ற மற்றொறு சூரிய ஒளி குவிநோக்கி (2 எண்கள்) (CST) சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது.

மேலும், பகல் நேரத்தில் சூரிய வெப்பத்தை கொண்டு பால்பண்ணையை இயக்குவதற்கு மதுரை பால்பண்ணையில்

ஒரு புது திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் அக்டோபர் 2017ல் துவக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8.7. சேலம் பால்பண்ணையில் உயர் வெப்பநிலையில் பால் பதப்படுத்துதல்

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் உயர் வெப்ப நிலையில் பால் பதப்படுத்தும் பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவின மதிப்பு ரூ.27 கோடியாகும். இப்பிரிவு 1 மணி நேரத்தில் 6,000 லிட்டர் பாலை உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தி சிப்பம் கட்டும் திறன்கொண்டதாகும். இத்திட்டம் ஆகஸ்டு 2017ல் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8.8. மதுரை பால்பண்ணை வளாகத்தில் ஐஸ் கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை

மதுரை பால்பண்ணை வளாகத்தில் நாளொன்றுக்கு 20,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையை நாளொன்றுக்கு 30,000 லிட்டர்அளவிற்கு விரிவாக்கம் செய்ய இயலும். 28.04.2017 அன்று இப்புதிய ஐஸ்கீரிம் தயாரிப்பு தொழிற்சாலைக்கு அடிமனை விழா நடைபெற்றது.

இத்தொழிற் சாலையின் கட்டுமானப் பணிகள் ஆனந்தில் உள்ள தேசிய பால்வள வாரியத்திடம் சுழற்சி முறையில் மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் டிசம்பர் 2018ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8.9. மதுரை பால்பண்ணையில் உயர் வெப்பநிலையில் நறுமண பால் பதப்படுத்துதல்

மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.40 கோடி மதிப்பில் உயர் வெப்ப நிலையில் நறுமண பால் பதப்படுத்தும் பிரிவு ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இப்பிரிவு 20,000 லிட்டர் நறுமண பாலை உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தி சிப்பம் கட்டும் திறன் கொண்டதாகும். இவ்வாறு தயாரிக்கும் நறுமண பால் 90 நாட்கள் வரை கெடாமல் இருக்கும். 28.04.2017 அன்று இப்புதிய நறுமண பால் பிரிவு தொழிற்சாலைக்கு அடிமனை விழா நடைபெற்றது.

இத்திட்ட பணிகள் ஜனவரி 2019ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 9. பால் உற்பத்தியாளர்களுக்கான சிறப்பு சேவைகள்

பால் உற்பத்தியாளர்களின் நலன் காப்பது பால் கூட்டுறவு சங்கங்களின் முக்கியமான நோக்கமாகும்.

### 9.1. மானிய விலையில் கால்நடைத்தீவனம் மற்றும் தாது உப்புக்கலவை வழங்குதல்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தங்களது சொந்த நிதியிலிருந்து கால்நடைத்தீவனத்திற்கு கிலோ ரூ.2/– முதல் ரூ.4/– வரை மானியமாகவும், தாது உப்புக் கலவைக்கு கிலோ ரூ. 25/– மானியமாகவும் வழங்கி வருகின்றன. இதன் காரணமாக கால்நடைத்தீவனம் வழங்குவது கடந்த 6 ஆண்டுகளில் 13 மடங்காக உயர்ந்துள்ளது. 2016–2017 ஆம் ஆண்டில் 46,281 மெட்ரிக்டன் கால்நடைத்தீவனம் மானிய விலையில் வழங்க ரூ.10.35 கோடியும், 389 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவை வழங்க ரூ.97 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

## 9.2. திருத்தியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி

பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தை அதிகரிக்கும் பொருட்டும், பால் உற்பத்தியாளர்கள் இடர்பாடுகளை சந்திக்கும் நேரங்களில் அவர்களுக்கு உதவிடும் வகையிலும் திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி உருவாக்கப்பட்டது.

**18.11.2013** முதல் செயல்படுத்தப்பட்டு வரும் மேற்கண்ட நலநிதிக்கு பால் உற்பத்தியாளர் உறுப்பினர் ஒருவர், தனது பால்பண பட்டுவாடா தொகையிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.**1/–** சந்தாவாக செலுத்தும் போது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஒன்றியம் மற்றும் சங்கம் அந்த உறுப்பினருக்கு மாதந்தோறும் தலா **50** பைசாவை தங்களது பங்களிப்பாக இந்நிதியில் செலுத்தும்.

விபத்தின் காரணமாக மரணமடையும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உடல் உறுப்புகளை இழக்கும் பால் உற்பத்தியாளருக்கு ரூ.**1.75** இலட்சமும், விபத்தில் ஏதாவது ஒரு உடல் உறுப்பு இழந்தால் ரூ.**75,000/–**ம் வழங்கப்படுகிறது. கல்வி/ திருமண உதவித் தொகையாக ரூ.**10,000 /–** நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சா் அவா்களால் **15.07.2015** அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதுவரை **73** பால் உற்பத்தியாளா்களுக்கு ரூ.**1.28** கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 9.3. பால் உற்பத்தியாளா்களுக்கு ஒன்றியங்களால் வழங்கப்படும் ஊக்கத்தொகை

மாவட்ட ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளா்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதன் மூலம் தங்களது செலவினத்திற்கு மேல் ஈட்டும் உபரி வருமானத்தை பகிா்ந்து கொள்கின்றன.

குறிப்பிட்ட மாவட்ட ஒன்றியம் ஈட்டும் உபரி வருமானத்தை பொறுத்து இந்த ஊக்கத்தொகை பொதுவாக லிட்டா் ஒன்றுக்கு **60** பைசாவிலிருந்து ரூ.**1.60** வரை வழங்கப்படுகிறது.

**2006–2011** ஆம் ஆண்டு காலத்தில் வழங்கப்பட்ட ரூ.**30.22** கோடி தொகையை ஒப்பிடும் போது **2011–2016**ம் ஆண்டில் **3,48,019** பால் உற்பத்தியாளா்களுக்கு ரூ.**157.22** கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. **(இணைப்பு–6)**

## 9.4. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் போனஸ்

சங்கம் இலாபம் ஈட்டும் காலத்தில், பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களுக்கு, பங்கு மூலதனத்தில், ஈவுத்தொகையாகவும், ஆதரவு தள்ளுபடி தொகையாகவும் (patronage rebate) மற்றும் இலாபத்தில் 50% தொகை போனஸாகவும் அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய பாலின் மதிப்பிற்கேற்ப வழங்கப்படுகிறது.

கடந்த 2016–2017ல் 2.89 இலட்சம் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.85.73 கோடி போனஸ், ஈவுத்தொகை மற்றும் ஆதரவு தள்ளுபடி தொகை ஆகியவை வழங்கப் பட்டுள்ளது.

## 9.5. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல் (BMC)

கிராம அளவில், பாலின் ஆரம்ப தரத்தை நிலைப்படுத்தவும், பால் குளிரூட்டும் நிலையங்கள்/ பால்பண்ணைகளுக்கு பாலை கொண்டு செல்வதை தவிர்க்கவும், காப்புத்திறனை நீட்டிப்பது நோக்கமாக கொண்டு மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன.

இதுவரை 15.14 இலட்சம் லிட்டர் குளிரூட்டும் திறனுடன் 341 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன.

எதிர் வரும் 5 ஆண்டுகளில், நாளொன்றுக்கு 500 லிட்டர் பால் கொள்முதல் செய்யும் அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 500 / 1000 லிட்டர் திறனுடைய மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படவுள்ளது.

**10. பணியாளர் நலன்**

1. அரசின் புதிய காப்பீடு திட்டம் இணைய மற்றும் மாவட்ட ஒன்றிய பணியாளர்களுக்கு 01.01.2017 முதல் நீடிக்கப்பட்டுள்ளது.

2. ஓய்வு பெற்ற இணையம் / ஒன்றிய பணியாளர்களுக்கு 16.12.2016 முதல் கருணை ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

3. 2016–2017 ஆம் ஆண்டில் பால்வளத் துறையில் 15 பணியாளர்களுக்கும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 115 பணியாளர்களுக்கும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் 107 பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

4. இதேபோன்று, நேரடி நியமன அடிப்படையில் பால்வளத் துறையில் 21 புதிய பணி நியமனங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 582 புதிய பணி நியமனங்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் 141 புதிய பணி நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

5. பொங்கல் பண்டிகையின் போது இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

6. தீபாவளி பண்டிகையின் போது இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

7. சங்கப்பணியாளர்களுக்கு சீருடை, துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

8. பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகை காலங்களில் இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு

சங்கப் பணியாளர்களுக்கு அன்பளிப்பாக பால் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

9. தொடக்க பால் கூட்டுறவு சங்க பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 01.10.2015 முதல் மாதமொன்றுக்கு ரூ.300/– முதல் ரூ.1000/– வரை அவர்களது பணி மூப்புக்கேற்ப கூடுதல் பணப்பயன் வழங்கப்பட்டுள்ளது.

10. நிர்வாக வசதிகளுக்காக இத்துறையின் பணிநிலைத்திறனில் ஒரே மாதிரியான பதவிகள் இருக்கும் வகையில் அமைச்சுப் பணியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர் பதவிகள் சார்நிலை பணியின் கீழான கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் இளநிலை ஆய்வாளர் பதவிகளாக பதவி உருமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

11. மாதவரம் பால்பண்ணையில் உள்ள குடியிருப்புகள் ரூ.4.12 கோடியில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

## 11. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை தனித் துறையாக உருவாக்கப்பட்டு, பால் கூட்டுறவுச் சங்கங்களின்

சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மட்டும் மேற்கொண்டு வருகிறது. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது மாநில அளவிலான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், மாவட்ட அளவிலான **17** பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தணிக்கைப் பணியினை மேற்கொண்டு வருகிறது.

### 11.1 பணிநிலைத்திறன்

இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட **333** பணியிடங்களில், கூட்டுறவுத் துறை மற்றும் கருவூலக் கணக்குத் துறையிலிருந்து பெறப்பட்ட **299** பணியாளர்களைக் கொண்டும், மீதமுள்ள பணியிடங்களை பால் கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சார்ந்த பணியாளர்களைக் கொண்டும் நிரப்பப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**அட்டவணை 12 : அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பதவிகள் மற்றும் பணிநிலைத்திறன்**

| பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| இயக்குநர் | 1 |
| இணை இயக்குநர் | 1 |
| துணை இயக்குநர் (கணக்கு) | 1 |
| மண்டல துணை இயக்குநர் | 5 |
| உதவி இயக்குநர் | 59 |
| முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் | 224 |
| இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் | 7 |
| அமைச்சுப்பணி | 10 |
| பொது சார்நிலைப்பணி | 8 |
| அடிப்படை பணி | 17 |
| **மொத்தம்** | **333** |

## 11.2 உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்

தணிக்கைப் பணிகளை உரிய காலக்கெடுவிற்குள், தரமாக முடிப்பதற்கும் அனைத்து நிலைகளிலும் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்வதற்கும்;

(i) இத்துறையின் இயக்குநரகம் மற்றும் மதுரை மண்டல அலுவலகம் ஆகிய அலுவலகங்களை கணிணிமயமாக்க அரசால் **ரூ.10.66** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது.

(ii) தலைமையகத்தின் இணை இயக்குநருக்கும், அனைத்து மண்டல துணை இயக்குநர்களுக்கும் **6** ஊர்திகள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 11.3 இணையத்தின் தணிக்கை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் **2015–2016** ஆம் ஆண்டுக்கான சட்டபூர்வ தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கைச் சான்று உரிய சட்டப் பூர்வ காலக்கெடுவிற்குள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இணையத்தின் **2016–2017**ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு தணிக்கையும் நிறைவு செய்யப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப் பட்டுள்ளது. **2016–2017** ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 11.4 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை

17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் **2015–2016**ம் ஆண்டிற்கான சட்டபூர்வ தணிக்கை நிறைவு செய்யப்பட்டு தணிக்கைச் சான்றுகள் அனைத்தும் உரிய சட்டபூர்வ காலக்கெடுவிற்குள் வழங்கப்பட்டு விட்டன. மேலும், **2016–2017**ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அனைத்து தணிக்கைச் சான்றுகளும் வழங்கப் பட்டுள்ளன. அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலும் **2016–2017**ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. **15–6–2017** அன்றுள்ளவாறு, புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் **2016–2017**ஆம் ஆண்டுக்கான சோதனைத் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளன.

## 11.5. தொடக்க மற்றும் நுகர்வோர் பால் உற்பத்தியாளர்கள்கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை

**2016–2017**ஆம் ஆண்டில், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் பால் கூட்டுறவுச் சங்கங்களின் **2015–2016**ம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கை **10669** சங்கங்களில் நிறைவு செய்யப்பட்டு, தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. **2016–2017**ம் ஆண்டுக்கான இறுதி தணிக்கைப் பணிகள் தணிக்கைத் திட்டத்தின் படி தற்பொழுது தொடங்கப்பட்டுள்ளது.

## 11.6. தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படைவிதிக் கட்டணம்

**2016–2017**ஆம் ஆண்டில், பால் கூட்டுறவுச் சங்கங்களில் சட்டபூர்வ தணிக்கை மேற் கொண்டதற்காக தணிக்கை கட்டணமாக **ரூ. 76.35** இலட்சம் மற்றும் அடிப்படை விதி 127ன் கீழ் பால் கூட்டுறவு இணையம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தொடக்கச் சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதற்காக, **ரூ.109.81** இலட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

## 11.7 தணிக்கை மறு ஆய்வு (கணக்கு) குழுக் கூட்டம்

பால் கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள தணிக்கை மறுப்பினங்களை தீர்வு செய்வதற்காக, தணிக்கை மறு ஆய்வுக்குழுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. **2016–2017**ம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் **91** தணிக்கை மறுப்பினங்களின் மீதான நிவர்த்தி அறிக்கைகளும், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் **1006** தணிக்கை மறுப்பினங்களின் மீதான நிவர்த்தி அறிக்கைகளும், தணிக்கை மறு ஆய்வு (கணக்கு) குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, தீர்வு செய்யப்பட்டுள்ளன.

## 11.8 பயிற்சி மற்றும் மேம்பாடு

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த அறிவை மேம்படுத்துவதற்காக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் நிதியுதவியுடன் துறையில் உள்ள தணிக்கையாளர்களுக்கு புத்தாக்கப்பயிற்சி வழங்கப்பட்டது.

## 12. முடிவுரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சக்தி வாய்ந்த தலைமையின் கீழ், இந்த அரசு மேற்கொண்ட பயனுள்ள தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, பால் கொள்முதல் உயர்ந்துள்ளதுடன், தரமான மற்றும் அதிகமான பால் பதப்படுத்தப்பட்டும், புதுமையான மற்றும் வேகமான விற்பனை உத்திகளின் காரணமாக மேம்படுத்தப்பட்ட தெரிவு நிலை வியாபார குறியீட்டையும் "ஆவின்" அடைந்துள்ளது.

இணையம் மற்றும் பெரும்பாலான மாவட்ட ஒன்றியங்கள் தொடர்ந்து இலாபத்தில் செயல்படுவதால் பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான மற்றும் உடனடி பால்பண பட்டுவாடா உறுதி செய்யப்படுகிறது.

ஆவின் வரலாற்றில், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மத்திய, மாநில அரசு மற்றும் சொந்த நிதி மூலம் வலுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புகளின் காரணமாக, தொடர்ந்து அதிகரித்து வரும் பால் கொள்முதல் மற்றும் நுகர்வோர்களின் தேவைகளை கையாள முடிகிறது.

பால் தொழிலில் ஆவின் உயர்ந்த நிலையை எட்டிடும் என்பதுடன் சர்வதேச நிலையை அடைய போதுமான திறமையையும் பெற்றுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

**கே.டி. ராஜேந்திரபாலாஜி**
**பால் மற்றும் பால்பண்ணை**
**மேம்பாட்டுத் துறைஅமைச்சர்**


# பால் கூட்டுறவுகள் குறித்த மேலோட்ட பார்வை

| வ. எண் | பொருள் | |
|---|---|---|
| 1 | தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 12,139 |
| 2 | 2016–17ல் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்) | 137 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 20.04 |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 4.60 |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 31 முதல் 36 |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 8 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 26 முதல் 31 |
| 9 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 11.35 |
| 10 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 9.53 |
| 11 | ஒன்றிய பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 18 |
| 12 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 5 |
| 13 | ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 29.07 |
| 14 | இணையத்தின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.15 |

| வ. எண் | பொருள் | |
|---|---|---|
| 15 | பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 35 |
| 16 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில் ) | 14.75 |
| 17 | மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை | 341 |
| 18 | மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில் ) | 15.14 |
| 19 | கிராம பால் கொள்முதல் வழித்தடங்கள் எண்ணிக்கை | 740 |
| 20 | மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 274 |
| 21 | சென்னை மாநகர பால் வினியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 132 |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை ( ஈரோடு, சேலம், மதுரை தருமபுரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/ நாள்) | 90 |
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன்( மெ.டன்) | 3,184 |

## இணைப்பு – 1


## நிதி ஒதுக்கீடு 2011–12 ஆண்டு முதல் 2017–18 வரை



## இணைப்பு – 2

## மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின்


## பால் கொள்முதல்



இணைப்பு – 3


கால்நடை தீவனம் வழங்கியது

(மெட்ரிக் டன்னில்)



இணைப்பு – 4


தாது உப்புக்கலவை வழங்கியது



## இணைப்பு – 5

### தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்


### National Agriculture Development Programme (NADP)



## இணைப்பு – 6

பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கிய ஊக்கத் தொகை

(ரூபாய் கோடியில்)



## அட்டவணை – 7

## ஆவின் பால் பொருட்களின் வகைகள்

| இனிப்புகள் | ஐஸ் கிரீம் வகைகள் | நொதியூட்டப்பட்ட பால்பொருட்கள் | கூழ்ம மற்றும் பிற பொருட்கள் |
|---|---|---|---|
| • இனிப்பு கோவா<br>• பேரிச்சை கோவா<br>• மைசூர் பா<br>• குலோப் ஜாமூன்<br>• பால் பேடா | • கப் ஐஸ் கிரீம்<br>• குடும்ப சிப்பம்<br>• கசட்டா<br>• பந்து ஐஸ் கிரீம்<br>• சாக்கோபார்<br>• மாங்கோ டூயட்<br>• பைனாப்பிள் டூயட்<br>• கிளாசிக் கோன்<br>• குல்பி பார்<br>• ஐஸ் கேண்டி<br>• பிரிமியம் வகை கப் ஐஸ் கிரீம் | • இனிப்பூட்டப் பட்ட யோகர்ட்<br>• பாக்கெட் தயிர்<br>• சிறப்பு தயிர் கப்புகள்<br>• பாக்கெட் லஸ்ஸி<br>• புரோபயோடிக் தயிர்<br>• புரோபயோடிக் லஸ்ஸி<br>• மோர் | • பனீர் மற்றும் பிற வகைகள்<br>• இனிப்பு இல்லா கோவா<br>• நறுமண பால்<br>• நட்டி சாக்லேட்<br>• பால் சாக்லேட் |


# ஒன்றியம் வாரியாக பால் கையாளும் திறன்

## ( நாளொன்றுக்கு லிட்டரில் )

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணை யின் பதனிடும் திறன் | | குளிரூட்டும் திறன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குளிரூட்டும் நிலையம் | | மொத்த பால் குளிர்விப்பான் | | மொத்தம் |
| | | எண் ணிக் கை | திறன் | எண் ணிக் கை | திறன் | எண் ணிக் கை | திறன் | |
| 1 | சேலம் | 1 | 5,00,000 | 3 | 2,10,000 | 50 | 1,99,000 | 4,09,000 |
| 2 | கோயம்புத்தூர் | 1 | 5,00,000 | 4 | 1,30,000 | 24 | 1,14,000 | 2,44,000 |
| 3 | ஈரோடு | 1 | 5,00,000 | 1 | 1,00,000 | 14 | 58,000 | 1,58,000 |
| 4 | மதுரை | 1 | 3,00,000 | 3 | 1,35,000 | 66 | 3,24,000 | 4,59,000 |
| 5 | திருச்சி | | | | | | | |
| | அ) திருச்சிராப்பள்ளி | 1 | 1,50,000 | 3 | 2,30,000 | 42 | 2,00,000 | 4,30,000 |
| | ஆ) பாடலூர் | 1 | 1,00,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | தருமபுரி | 1 | 2,00,000 | 2 | 60,000 | 21 | 93,000 | 1,53,000 |
| 7 | வேலூர் | 1 | 1,50,000 | 4 | 2,30,000 | 38 | 1,76,000 | 4,06,000 |
| 8 | விழுப்புரம் | 1 | 1,00,000 | 2 | 1,40,000 | 19 | 78,000 | 2,18,000 |
| 9 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 4 | 90,000 | 12 | 58,000 | 1,48,000 |
| 10 | காஞ்சிபுரம்– திருவள்ளூர் | 1 | 50,000 | 2 | 60,000 | 11 | 45,000 | 1,05,000 |
| 11 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 6 | 11,000 | 21,000 |
| 12 | சிவகங்கை | 1 | 50,000 | 2 | 20,000 | 12 | 52,000 | 72,000 |
| 13 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | 1 | 5000 | 15,000 |
| 14 | புதுக்கோட்டை | 1 | 35,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 12 | 50,000 | 90,000 |
| 16 | தஞ்சாவூர் | 1 | 26,000 | 1 | 10,000 | 13 | 51,000 | 61,000 |
| 17 | கன்னியாகுமரி | 1 | 16,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 18 | 29,07,000 | 24 | 400,005 | 187 | 15,14,000 | 29,89,000 |
| | பெருநகர பால் பண்ணைகள் | | | | | | | |
| 1. | மத்திய பால்பண்ணை | 1 | 3,50,000 | | | | | |
| 2. | அம்பத்தூர் | 1 | 4,00,000 | | | | | |
| 3. | சோழிங்க நல்லூர் | 1 | 4,00,000 | | | | | |
| 4, | பால் பொருட்கள் பண்ணை | 1 | 65,000 | | | | | |
| 5. | திருவண்ணாமலை (த.நா.கூ.பா.உ.இ) | 1 | 2,00,000 | | | | | |
| | மொத்தம் | 5 | 14,15,000 | | | | | |
| | கூடுதல் மொத்தம் | 23 | 43,22,000 | | | | | |

## இணைப்பு – 8

## விற்பனை வருவாய் (இணையம் மற்றும் ஒன்றியங்கள் ரூபாய் கோடியில்)



## தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்



## மொத்த பால் குளிர்விப்பான்



## பால் எடைபோடும் பிரிவு



## பால் பதப்படுத்தும் பிரிவு



## பால் பை நிரப்பும் இயந்திரம்




## பால் குளிர் அறை – சேலம்



## பாடலூர் பால்பண்ணை –பெரம்பலூர் மாவட்டம்




## ஆவின் பால் பொருட்கள்



## அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை



## ஐஸ்கீரிம் கேண்டி இயந்திரம் – அம்பத்தூர்



## சாக்கோபார் ஐஸ்கீரிம் இயந்திரம்–அம்பத்துார்



## உயர் வெப்பநிலை பதப்படுத்தும் பிரிவு



# ஆவின் பால் பொருட்கள்



## உயர் வெப்பநிலையில் பதப்படுத்தும் ஆலை – சேலம்



# தானியங்கி பால்பண்ணை – கோயம்புத்தூர்



## அதி நவீன பாலகம் – மதுரை



## அதி நவீன பாலகம் – திண்டுக்கல்



## சென்னையில் ஆவின் பால்பொருட்கள் இலவச டோர் டெலிவரி சேவை தொடக்க விழா




## ஐஸ்கீரிம் குளிர்பதன வாகனம்

